# தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம்

## செய்திக் குறிப்பு

தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடந்த 02.11.2017 செய்தி வெளியீட்டின் மூலம் பல்வேறு காரணிகளை முன்னிட்டு தொகுதி 4இல் அடங்கிய பதவிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் ஆகிய பதவிகளுக்கான தெரிவுகளை ஒரே தேர்வின் மூலம் தேர்வு செய்வது என்ற முடிவினை வெளியிட்டது.

இது குறித்து கிராம நிர்வாக சங்க மாநில தலைவரால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள கருத்து குறித்து தேர்வாணையம் பின்வருமாறு தெளிவுபடுத்துகிறது.

1. கிராம நிர்வாக அலுவலர், பதவிக்கான வயது வரம்பில் எவ்வித மாற்றமும் அறிவிக்கப்படவில்லை. இப்பதவிக்கான குறைந்தபட்ச வயது 21 மற்றும் அதிகபட்ச வயது வரம்பு 40 என்கின்ற விதியே தொடர்ந்து கடைபிடிக்கப்படும். மேலும் தொகுதி-4ல் அடங்கியுள்ள பதவிகள் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான வயது மற்றும் இதர தகுதிகளில் மாற்றம் ஏதுமில்லை. போட்டித்தேர்வு மட்டுமே ஒரே தேர்வாக நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது.

2. கிராம நிர்வாக அலுவலர் பதவிக்கான தேர்விற்கு விண்ணப்பித்தவர்களில் மூன்றில் ஒருபங்கு விண்ணப்பதாரர்கள் மட்டுமே தேர்வுக்கட்டணம் செலுத்தியுள்ளனர். மூன்றில் இருபங்கு விண்ணப்பதாரர்கள் தேர்வுக்கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்குப் பெற்றவர்களாவர். மேலும் விண்ணப்பக்கட்டணத்தைப் பொருத்தவரையில் ஒருமுறை நிரந்தரப் பதிவு (One Time Registration) செய்து விண்ணப்பக் கட்டணம் செலுத்தியவர்கள் ஐந்தாண்டுகள் அப்பதிவினைப் பயன்படுத்தி அனைத்துத் தேர்வுகளுக்கும் விண்ணப்பிக்கும் போது விண்ணப்பக் கட்டணம் செலுத்த வேண்டியதில்லை. இத்தகு சூழலில் இத்தேர்வுகளை தனித்தனியாக நடத்துவதற்கு பெருந்தொகை அரசால் செலவிடப்படுகிறது. ஆகையால் இருதேர்வுகளையும் சேர்த்து நடத்துவதன் மூலம் அரசிற்கு சுமார் 15 கோடிவரை செலவு தவிர்க்கப்படுவதுடன், காலியிடங்கள் விரைவில் நிரப்பப்பட ஏதுவாகிறது.

3. பல்வேறு நடைமுறை சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து, பலதரப்பட்ட இளைஞர்களின் நலனைக்கருத்தில் கொண்டு தேர்வாணையம் ஒரே தேர்வு முறையினை செயல்படுத்த முடிவு செய்துள்ளது.

நாள்:07.11.2017 செயலாளர்.